(முழுப் பதிப்புரிமையுடையது)

# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

# இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2013(1)

## சமூகவியல் (06)

**3 மணித்தியாலங்கள்**

**ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

---

1. முதுமை வயதிலுள்ள குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை, சமூகவியல் கண்ணோட்டத்தில் விளக்குக.
2. குடும்ப உறவினர்களது சமூக அந்தஸ்தும் வகிபாகமும் (Status & Role), நவீன இலங்கை சமுதாயத்தில் எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதனைத் தெளிவுபடுத்துக.
3. இலஞ்சமும் ஊழலும் தோற்றம் பெறக் காரணமாக அமையும் நவீன அதிகார வர்க்க முறைமையின் பலவீனங்கள் யாவை?
4. ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் 'சமயம்' மூலம் மேற்கொள்ளப்படும் சமூகப் பணிகளை விளக்குக.
5. இலங்கையை அடிப்படையாகக் கொண்டு, நவீன கல்வியமைப்பில் காணப்படும் பலவீனங்களை விளக்குக.
6. பிறர் நலன் பேணலும் பரஸ்பரம் ஒத்துழைக்கும் சமூக ஒழுக்க மாண்புகளும், வாழ்க்கையையும் சமுதாய செயற்பாடுகளையும் எவ்வாறு இலகுபடுத்துகின்றன என்பதனை கிராமிய சமூகங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
7. நகரப்புற சமூகங்களில் காணக்கூடிய கலப்புத் தன்மை கொண்ட சமூகப் பண்புகள், அச்சமூகத்தின் அமைதியான வாழ்விலும் ஒழுக்கப் பண்புகளிலும் எத்தகைய தாக்கங்ளைச் செலுத்துகின்றன என்பதை விளக்குக.
8. மானிட உறவுகளது எல்லைகளின் விரிவாக்கத்திற்கு நவீன தகவல் தொழிநுட்பம் பங்களிப்புச் செய்யும் முறையை விளக்குக.
9. 'திவிநெகும' நிகழ்ச்சித் திட்டத்தின் சமூக ரீதியான தாக்கங்களை உதாரணங்களுடன் பகுப்பாய்வு செய்க.
10. நவீன சமூக அமைப்பில் 'வேலை' தொடர்பாகக் காணப்படும் பிரதான சமூகப் பெறுமானங்கள் மற்றும் நியமங்கள் (Norms) யாவை?